[25th February 1961

S.S.L.C. Examination fee

* 471 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the Harijan students have to pay S.S.L.C. Examination fee; and

(*b*) if so, whether the Government propose to exempt them from the payment of this fee?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir.

(*b*) No, Sir. But the value of examination fees is combined with the value of scholarships paid by the Harijan Welfare Department.

SRI T. T. DANIEL : Since the Harijan students have to pay the S.S.L.C. Examination fee first and then get refund from the Government, many Harijan students are unable to pay even the examination fee and so they are unable to sit for the examination and all the benefits as are given to the Harijan students till the end of the year do not bear any fruit also. So, will the Government consider the question of changing their policy in the matter of giving concessions to the Harijan students so that they may be exempted from paying the S.S.L.C. Examination fee?

THE HON. SRI P. KAKKAN : The Government in G.O. Ms. No. 4452, Industries, Labour and Co-operation, dated 17th November 1959, have ordered that the value of the examination fee may be combined with the value of scholarship granted by the Harijan Welfare Department. So, it is not possible to give exemption.

SRI P. G. MANICKAM : எஸ்.எஸ்.எல்.ஸி. பரீட்சைக்கு ஆஜராகக்கூடிய மாணவர்கள் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் எத்தனை பேர் என்ற புள்ளிவிவரத்தையாவது எடுத்து, எஸ்.எஸ்.எல்.ஸி. தேர்தல் போர்டுக்கு அதைத் தெரிவித்து அவர்களுக்கு ஆரம்பத்திலேயே விலக்கு அளிப்பதுபற்றி சர்க்கார் கவனம் செலுத்துமா ?

THE HON. SRI P. KAKKAN : புள்ளி விவரங்களை எடுப்பதற்கு முன்பாகவே அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. ஸ்காலர்ஷிப் கொடுக்கும்பொழுது, முதல் தவணையிலேயே பரிட்சைக் கட்டணத்தையும் சேர்த்துத்தான் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

SRI K. VINAYAKAM : அப்படி ஸ்காலர்ஷிப் கொடுக்கும் பொழுதே, படிப்பதற்கான ஸ்காலர்ஷிப் பணத்தையும், பரிட்சைக் கட்டணத்தையும் சேர்த்துக் கொடுத்துவிட்டால், செலக்ஷன் பரிட்சையிலே அந்த மாணவர்களை தகுதியில்லை என்று நிறுத்தி விட்டால், அந்தப் பணம் வீணாய்ப்போய்விடுமே. அதை வசூலிப்பதற்கும், அதை நல்ல முறையில் பயன்படுத்துவதற்கும் அரசாங்கம் விதி ஏற்படுத்தியிருக்கிறதா ?

25th February 1961]

THE HON. SRI P. KAKKAN : மாணவர்கள் நன்றாகப் படித்து பரிட்சையில் தேருவார்கள் என்ற நோக்கத்துடன்தான் பரிட்சைக் கட்டணத்தையும் சேர்த்துக் கொடுக்கிறோம். அதிகப்படியான மாணவர்கள் இந்தமாதிரி பரிட்சையில் தேர்வு பெறுமல் இருந்தால், அதைப் பற்றி பின்னர் பரிசிலனை செய்யப்படும்.

SRIMATHI A. S. PONNAMMAL : இந்தப் பரிட்சைக்காகக் கொடுக்கக்கூடிய பணம் ரூபாய் 15-ம் பரிட்சை எழுதி 5 அல்லது 6 மாதங்கள் கழிந்த பிறகுதான் சர்க்காரிடமிருந்து கிடைக்கிறது. இப்பொழுது அமைச்சர் அவர்கள் முன்பே கொடுப்பதாகக் கூறினார்களே. ஆகவே இதைப்பற்றி விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI P. KAKKAN : 1959-க்கு முன்னர் பரிட்சைக் கட்டணத்தை முன்னர் கட்டிவிட்டு, பின்னர் அதை மாணவர்களுக்கு ரீபண்டு செய்யும் முறை இருந்தது. அரசாங்கம் இதைப் பரிசிலனை செய்து, முதல் தவணையிலேயே இந்த பரிட்சைக்கான கட்டணத்தையும் கொடுப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. இதனால் மாணவர்களுக்குக் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன்.

SRI A. A. RASHEED : Is it not a fact that the S.S.L.C. examination fee is rather high for all students and if so, is there any proposal to reduce it?

MR. SPEAKER : The hon. Member may put a separate question. The main question relates to Harijan students only and the hon. Member is putting a question relating to all students. How can the Hon. Minister answer it?

SRI A. VEDARATHNAM : பரிட்சையில் தவறிப்போன ஹரிஜன மாணவர்களுக்கு இரண்டாவது தடவை இந்தப் பரிட்சைக் கட்டணம் அளிக்கப்படுமா? ஒரு தரம் பரிட்சையில் தவறிப் போனால் மறுபடியும் இந்த போர்டிங் கட்டணம் எல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறதே. அதேபோல் இந்த பரிட்சைக் கட்டணமும் கொடுக்கப்படுமா?

THE HON. SRI P. KAKKAN: என்னுடைய ஞாபகசக்திக்கு எட்டியவரை, இந்தப் பரிட்சைக் கட்டணம் இரண்டாவது முறை கொடுக்கப்படுவதில்லை என்று நினைக்கிறேன். இப்படிக் கொடுத்துக்கொண்டே போனால், பையன்கள் முதல் தடவையிலேயே தேர்ச்சி பெறமாட்டார்கள்.

SRI P. G. MANICKAM : உபகாரச் சம்பளம் செப்டம்பருக்கு மேற்பட்டுத்தான் கிடைக்கிறது. தேர்வுக் கட்டணம் பெப்ரவரி மாதத்திலே கட்டவேண்டியிருக்கிறது. உற்ற சமயத்திலே மாணவர்களுக்குத் தேர்வுக் கட்டணத் தொகை கிடைக்காமல் இருப்பதால், பெப்ரவரி—மார்ச் மாதத்திலேயே இந்தத் தேர்வு கட்டணத் தொகை மாணவர்களுக்குப் போய்ச் சேரும்படி சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா?

THE HON. SRI P. KAKKAN : முதல் தவணையிலேயே இந்த பரிட்சைக் கட்டணத்தையும் சேர்த்து ஸ்காலர்ஷிப் கொடுக்கப் பட்டு வருகிறது என்று சொன்னேன்.

SRI A. VEDARATHNAM : தவறிப்போன மாணவர்களுக்கு மறுமுறை படிப்பதற்கு போர்டிங் கிராண்டு கொடுக்கப்பட்டு வருகிறது. பரிட்சைக் கட்டணத்தைக் கொடுக்காமல் இருந்தால் அது நியாயமானதா என்பதை கனம் அமைச்சர் அவர்கள் பரி சீலனை செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : பரிட்சையில் தவறிப்போன மாணவர்களுக்கு இரண்டாவது தரம் ஹாஸ்டல் பீஸ் கொடுக் கிறார்கள். இது எஸ்.எஸ்.எல்.ஸி. வரைக்கும்தான் என்பது என்னுடைய ஞாபகம். எஸ்.எஸ்.எல்.ஸி.-யில் தவறினால், இது கிடையாது என்று நினைக்கிறேன்.

Wells

* 472 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகாவில் வெட்டப்பட்டுள்ள குடி தண்ணீர் கிணறுகளிலும், விவசாயத்திற்கான நீர்ப்பாசன கிணறுகளிலும் சுமார் 400 கிணறுகளில் தண்ணீர் இல்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) அதைப் போக்குவதற்கு சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) Yes, Sir, but the number of such wells was only about half the number mentioned by the hon. Member.

(b) In the case of drinking water wells, deepening was undertaken with Government funds. As regards irrigation wells, loans under the Land Improvement Loans Act were granted for the deepening of wells in deserving cases. It may, however, be mentioned for information that due to the recent rains, the position has improved.

SRI V. K. KOTHANDARAMAN : 60 அடி 70 அடி ஆழம் வரையில் குடி தண்ணீருக்காகவேண்டி வெட்டப்பட்டுள்ள கிணறு களில் தண்ணீர் வசதி இல்லாத நிலைமை இருக்கிறதே. இந்தக் குடி தண்ணீர் பிரச்னையைத் தீர்த்து வைப்பதற்காகவேண்டி, அங்கே மோர்தானா அணையைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அணைகட்டும் விஷயம் வேறு. இது கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போனதைப் பற்றியது. எப்ரல் மாதத்தில் நிலைமை அப்படித்தான் இருந்தது. அதற்காக 200 கிணறுகளை ஆழப்படுத்தவேண்டியிருந்தது. ஆனால் அதற்கு முன்பே மழை பெய்துவிட்டது. முப்பத்திரண்டு கிணறு